## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 61/22

வாக்குமூலம்..வா.சா.3

| பெயர் | வெள்ளைச்சாமி | தொழில் | |
|---|---|---|---|
| த/பெ. | வீரப்பன் | வயது | 58 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 02.04.2025 ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி சுதாகர் அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண், தெரியாது. வழக்கு சொத்தின்பரப்பளவு 30 சென்ட் ஆகும். வாதி சுதாகர் எனது அண்ணன் மகன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். சுதாகர் அப்பாவின் பெயர் மாணிக்கம் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். அவர் பெயர் காளிமுத்து தான். காளிமுத்து 50, 60 வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி குடியிருக்கிறார்.

2. எனக்கு வயது 58 என்றால் சரிதான். நான் பிறப்பதற்கு முன்பே காளிமுத்து வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். காளிமுத்து வீடு கட்டி குடியிருப்பது புல எண் 338/1-ல் தென் மேற்கு மூலையில் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு தென்புறம் வாதி சுதாகர் இடம் இருந்தது என்றால் சரிதான். சுதாகர் இடத்திற்கு கீழ்புறம் எனக்கு இடம் இருந்தது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான இடத்தின் புல எண். 338/24 என்றால் சரிதான். புல எண். 338/24-ல் உள்ள இடத்தை நான் ரவி, சுப்பிரமணியன் ஆகியோரிடம் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் கொடுத்த தேதி 24.11.1994 என்றால் சரிதான்.

3. மேற்படி கிரைய ஆவண வாசகங்கள் நான் சொல்லி தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது மேற்படி பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் என்னால் அந்த எழுத்தை படிக்க முடியாது. எனக்கு எழுத, படிக்க தெரியும். எனக்கு

பத்திரத்தை படிக்க தெரியும் என்றாலும், படிக்க தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தின் சொத்து விவர நான்கெல்லை வாசகங்கள் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் சம்சூதீன் வகையறாவிற்கு தெற்கு என்று வாசகம் கண்டு கிரையம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த உண்மையை மறைப்பதற்காக பத்திரத்தை படிக்க முடியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்திலிருந்து 1 பர்லாங் துாரத்தில் வசிக்கிறேன். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி வழக்கு சொத்தில் ஆடு, மாடு, கட்டி குப்பைக்குழி போட்டு அனுபவம் செய்து வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.